**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 23.07.2018–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு அவசரக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : .07.2018 இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

(1) இராசிபுரம் நகராட்சியில் உள்ள எடப்பாடி– இராசிபுரம் கூட்டு குடிநீர் திட்டம் மூலம் ஏற்கனவே உள்ள 4 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுடன், புதியதாக IUDM 2013–14 திட்டத்தின் கீழ் 1 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியும் ஆக மொத்தம் 5 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை 5 குடிநீர் விநியோக மண்டலங்களாக பிரிக்கப்பட்டு ( Zones) தினசரி 4.50 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் பொதுமக்களுக்கு 3 நாட்களுக்கு ஒரு முறை நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் வீதம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் இராசிபுரம் நகராட்சியில் மொத்தமுள்ள 17701 வரிவிதிப்புகளில், 16451 குடியிருப்புகளுக்கு 10152 குடிநீர் இணைப்புகள் நகராட்சி மூலம் வழங்கப்பட்டு குடிநீர் வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் குடிநீர் இணைப்பு அல்லாத 6200 குடியிருப்புகளுக்கு புதியதாக குடிநீர் இணைப்புகள் வழங்கும் பணிக்காக TUFIDCO மூலம் வட்டியில்லா கடனாக `. 246.00 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேலும், 29.06.2018 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்ட நடவடிக்கையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் அறிவுறுத்தியதற்கிணங்க அனைத்துப் பகுதிகளுக்கும் தினமும் சீரான குடிநீர் வழங்க ஏதுவாக தற்போதுள்ள குடிநீர் வினியோக முறையை (Distribution System) சரிசெய்து அனைத்து பகுதிகளுக்கும் ஒரே மாதிரியான குடிநீர் அழுத்தத்துடன் கூடிய விநியோக முறையாக (District Metering Area) மாற்றி அமைக்க கலந்தாலோசகர் நியமித்து விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யவும், மேலும் இதற்கான செலவினத்தை Project Development Grant Fund (PDGF) அல்லது Project Preparatory Fund (PPF) நிதியின் கீழ் மேற்கொள்ளவும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(இ2/218/18)

**தீர்மானம் எண். 366**

அனுமதிக்கப்பட்டது

(2) நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது சுற்றறிக்கை எண். 13277/2017/குவ1 நாள் 27.06.2018–இல் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடைத் திட்ட வீட்டு இணைப்புகளுக்கு பெறப்படும் முன்வைப்புத் தொகை (Deposit) மற்றும் இணைப்புக் கட்டணத்தினை (connection charges) சம்மந்தப்பட்ட வீட்டின் சொத்துவரி விதிப்புடன் இணைத்து தவணை முறையில் வசூலிக்க, நகர்மன்றத் தீர்மானம் நிறைவேற்றி, குடிநீர் உபவிதிகளில் திருத்தம் மேற்க்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளிலுள்ள வீடுகளுக்கும் மற்றும் இதர இனங்களுக்கும் குடிநீர் குழாய் இணைப்பு வழங்க 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு எண்கள். 130, 131, 132 (2), 134, 135, 306 (3) (சி) (இ) (எப்) (ஜி) (எச்) (ஐ), 306 (7) மற்றும் 308 ஆகிய விதிகளின்கீழ் உருவாக்கப்பட்ட துணை விதி எண். (1)–ஐ கீழ்க்கண்டுள்ளவாறு திருத்தம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1) குடிநீர் இணைப்பு பெறுவதற்காக தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 131 உபவிதி (1) மற்றும் விதி எண். 132–இன்படியும் மற்றும் திருத்தப்பட்ட விதிகளின்படியும் ஒவ்வொரு குழாய் இணைப்பிற்கான விண்ணப்பத்தைக் கட்டிட உரிமையாளர் அல்லது குடியிருப்பவர் வீட்டு உரிமையாளரிடமிருந்து எழுத்து மூலமாக ஒப்புதல் கடிதம் பெற்று படிவம் (அ)–இல் கண்டுள்ள கட்டண விகிதங்கள் மற்றும் பதிவுக் கட்டணம் `.100/- (நூறு மட்டும்) செலுத்தி ஆணையருக்கு அனுப்ப வேண்டும். பதிவுக் கட்டணம் செலுத்தி பதிவு செய்த நாள் கணக்கிட்டு முன்னுரிமைப் பட்டியல் தயாரித்து அதனடிப்படையில் குழாய் இணைப்பு வழங்கப்படும். மேலும், குறிப்பிடும் வைப்புத் தொகை மற்றும் மதிப்பீட்டுக் கட்டணங்களை பத்து சம தவணைகளாக நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டும். முதல் தவணை நகராட்சியில் செலுத்தி ஆணை பெற்று குழாய் இணைப்பிற்கான பணிகள் துவங்கப்பட வேண்டும். பதிவுக் கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் திரும்பி வழங்கப்பட மாட்டாது.

மேற்க்கண்டுள்ள விதி எண். (1)–ஐ திருத்தம் செய்து மாவட்ட அரசிதழில் வெளியிடவும், அதற்கான செலவினத் தொகையினை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) குடிநீர் துணை விதி எண்.1–ஐ திருத்தம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) திருத்தம் செய்யப்பட்ட துணை விதியினை மாவட்ட அரசிதழில் வெளியிடவும், செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/541/18)

**தீர்மானம் எண். 367**

அனுமதிக்கப்பட்டது

(3) இராசிபுரம் நகராட்சி ஈப்பு எண். ட்டி என் 28 க்யூ 8402–இல் கேஸ்கட் மற்றும் ரேடியேட்டர் மாற்ற ஆகும் உத்தேச செலவினம் `. 12000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. பணியினை அங்கீகரிக்கப்பட்ட மகேந்திரா பணிமனையான நாமக்கல் SKS ஆட்டோமொபைல்ஸ் நிறுவனத்தில் மேற்க்கொள்ளவும், செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/1639/18)

**தீர்மானம் எண். 368**

அனுமதிக்கப்பட்டது

(4) இராசிபுரம் நகராட்சி புதிய அலுவலக கட்டிடத்தின் முதல் தளத்தில் நகர சார் ஆய்வர் அறையில் நில அளவை ஆவணங்களை பாதுகாப்பாக வைக்க அலமாரிகள் கீழ்க்கண்டுள்ளவாறு அமைக்கப்பட வேண்டும்.

1) File cub board 6'x3'x1 ½ ' - 2 Nos.
2) Map cub board 6'x3'x2' - 1 No.

மேற்காணும் பணிகளுக்காகும் உத்தேச செலவினம் `. 145000/– நகராட்சிப் பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்ற அனுமதியும், இப்பணியினை சேலம் மாவட்ட சர்வோதயா சங்கம், ஆத்தூர் அரசு சார்பு நிறுவனம் மூலமாக மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : அ)** `. 145000/– செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ள அனுமதிக்கலாம்.

ஆ) பணியினை அரசு சார்பு நிறுவனமான சேலம் மாவட்ட சர்வோதயா சங்கம், ஆத்தூர் மூலமாக மேற்க்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

(இ1/852/18)

**தீர்மானம் எண். 369**

அனுமதிக்கப்பட்டது

(5) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் மூன்று இடங்களில் on site composting பணிக்காக தொட்டிகள் (Tubes) கட்டப்பட்டுள்ளது. அவற்றில் மக்கும் குப்பைகளை வெட்டி போடும்போது சீக்கிரம் மக்கி உரம் தயார் செய்ய வேண்டும். எனவே, மக்கும் குப்பைகளை வெட்ட கையினால் இயக்கப்படும் இயந்திரம் (Shredder) 6 வாங்க உத்தேச செலவினம் `. 40000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/1694/18)

**தீர்மானம் எண். 370**

அனுமதிக்கப்பட்டது

(6) இராசிபுரம் நகராட்சி குடிநீர் விநியோகப் பணிக்குத் தேவையான சோடியம் ஹைபோ குளோரைடு திரவம் ஓராண்டிற்கு விநியோகம் செய்ய `. 800000/– மதிப்பீட்டுப் பணிக்கு 06.07.2018 அன்று பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு :

1) ஸ்ரீ பாலாஜி அன்ட் கம்பெனி, தளவாய்ப்பட்டி, சேலம் – `. 17.93 / லிட்டர் (GST வரி உட்பட)
2) ஸ்ரீ ராஜகணபதி கெமிக்கல்ஸ், சித்தனூர், சேலம் – `. 18.25 / லிட்டர் (GST வரி உட்பட)

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் வழங்கியுள்ள ஸ்ரீ பாலாஜி அன்ட் கம்பெனி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் வழங்கிய ஸ்ரீ பாலாஜி அன்ட் கம்பெனி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

(இ2/999/18)

**தீர்மானம் எண். 371**

அனுமதிக்கப்பட்டது

(7) இராசிபுரம் நகராட்சி வார்டு எண்.1 குமாரசாமி தெருவிலுள்ள 5 எச்.பி. மின்மோட்டார் பொருத்தப்பட்ட ஆழ்துளைக் கிணறு மேற்பகுதியினை வாகனங்கள் செல்ல கான்கிரீட் மூடி அமைக்க `. 30000/– மதிப்பீட்டுப் பணிக்கு 06.07.2018 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு :

1) திரு ஆர். எஸ். ரங்கசாமி, ஒப்பந்ததாரர், காட்டூர் – மதிப்பீட்டைவிட 0.03 % குறைவு
2) திரு ஆ. மதியழகன், ஒப்பந்ததாரர், இரா. பட்டணம் – மதிப்பீட்டைவிட 1.46 % அதிகம்.

மதிப்பீட்டைவிட 0.03 % குறைவான திரு ஆர். எஸ். ரங்கசாமி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மதிப்பீட்டைவிட 0.03 % குறைவான திரு ஆர். எஸ். ரங்கசாமி, ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

(இ2/1041/18)

**தீர்மானம் எண். 372**

அனுமதிக்கப்பட்டது

(8) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 26 காட்டூர் காட்டுக்கொட்டாய் பகுதியில் குடிநீர் பகிர்மானக் குழாய் `. 24000/– மதிப்பீட்டில் அமைக்கும் பணிக்கு 06.07.2018 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு :

1) திரு ஆர். எஸ். ரங்கசாமி, ஒப்பந்ததாரர், காட்டூர் – மதிப்பீட்டைவிட 0.18 % குறைவு
2) திரு ஆ. மதியழகன், ஒப்பந்ததாரர், இரா. பட்டணம் – மதிப்பீட்டைவிட 6.66 % அதிகம்.

மதிப்பீட்டைவிட 0.18 % குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு ஆர். எஸ். ரங்கசாமி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மதிப்பீட்டைவிட 0.18 % குறைவான திரு ஆர். எஸ். ரங்கசாமி, ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(இ2/148/18)

**தீர்மானம் எண். 373**

அனுமதிக்கப்பட்டது

(9) இந்நகராட்சியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்த திரு அ. கண்ணபிரான் (ஓய்வு) அவர்கள் நீதிப்பேராணை எண். 1382/2018—இல் சென்னை, உயர்நீதி மன்றத்தில் தனக்கு ஈட்டிய மற்றும் ஈட்டா விடுப்பு ஊதியம் மற்றும் ஓய்வூதியப் பயன்கள் வழங்கக் கோரி வழக்கு தொடர்ந்தது. மேற்படி வழக்கு சம்மந்தமாக சென்னை, உயர்நீதி மன்ற அரசு சிறப்பு வழக்கறிஞர் அவர்களிடம் சட்டக் கருத்துரு பெற்றது. அதற்கான தொகை `. 10000/—ஐ வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : 1)** மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொது நிதியிலிருந்து மேற்படி செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(சி1/968/09)

**தீர்மானம் எண். 374**

அனுமதிக்கப்பட்டது

(10) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 22 அண்ணாசாலை ஆழ்துளைக் கிணற்றிலிருந்து வார்டு எண். 19, 20, 21 மற்றும் 22 காமராஜ் நகர் பகுதிகளுக்கு தண்ணீர் செல்லும் குழாய்கள் நெடுஞ்சாலைத் துறை சாலை விரிவாக்கப் பணிகளால் சேதமடைந்துவிட்டன. ஆழ்துளைக் கிணற்றிற்கு கற்காரை மூடி அமைத்து HDPE குழாயமைக்கும் `. 175000/— மதிப்பீட்டுப் பணிக்கு 18.5.2018—இல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு :

**1)** திரு ஆர். எஸ். ரங்கசாமி, ஒப்பந்ததாரர், காட்டூர் — மதிப்பீட்டைவிட 0.16 % குறைவு
**2)** திரு ஆ. மதியழகன், ஒப்பந்ததாரர், இரா. பட்டணம் — மதிப்பீட்டைவிட 4.30 % அதிகம்.

மதிப்பீட்டைவிட 0.16 % குறைவான திரு ஆர். எஸ். ரங்கசாமி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.16 % குறைவான திரு ஆர். எஸ். ரங்கசாமி, ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

(இ2/401/18)

**தீர்மானம் எண். 375**

அனுமதிக்கப்பட்டது

(11) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 16 மற்றும் 26 பகுதிகளிலுள்ள 1000 லிட்டர் தண்ணீர் தொட்டி மற்றும் வால்வு பழுதுகள் சரிசெய்யும் `. 30000/— மதிப்பீட்டுப் பணிக்கு 18.5.2018 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு :

**1)** திரு ஆர். எஸ். ரங்கசாமி, ஒப்பந்ததாரர், காட்டூர் — மதிப்பீட்டைவிட 0.40 % குறைவு
**2)** திரு ஆ. மதியழகன், ஒப்பந்ததாரர், இரா. பட்டணம் — மதிப்பீட்டைவிட 4.76 % அதிகம்.

மதிப்பீட்டைவிட 0.40 % குறைவான திரு ஆர். எஸ். ரங்கசாமி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மதிப்பீட்டைவிட 0.40 % குறைவான திரு ஆர். எஸ். ரங்கசாமி, ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

(இ2/763/18)

**தீர்மானம் எண். 376**

அனுமதிக்கப்பட்டது

(12) இராசிபுரம் நகராட்சி அலுவலகப் பணியாளர்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் இயந்திரம் பொருத்த `. 35000/– மதிப்பீட்டுப் பணிக்கு 18.5.2018 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு :

1) திரு ஆர். எஸ். ரங்கசாமி, ஒப்பந்ததாரர், காட்டூர் – மதிப்பீட்டைவிட 0.12 % குறைவு
2) திரு ஆ. மதியழகன், ஒப்பந்ததாரர், இரா. பட்டணம் – மதிப்பீட்டைவிட 1.25 % அதிகம்.

மதிப்பீட்டைவிட 0.12 % குறைவான திரு ஆர். எஸ். ரங்கசாமி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மதிப்பீட்டைவிட 0.12 % குறைவான திரு ஆர். எஸ். ரங்கசாமி, ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

7இ2/538/18)

**தீர்மானம் எண். 377**

அனுமதிக்கப்பட்டது

ஒம்/– ப. கிருஷ்ணமூர்த்தி,
தனி அலுவலர்

.

/ உண்மை நகல் /

ஆணையாளர்
இராசிபுரம் நகராட்சி.